மாண்புமிகு துணைப் பேரவைத் தலைவர் : நான் எப்பொழுதும் நின்று கொண்டே இருப்பேன் என்று திரு. விநயகம் அவர்கள் நினைப்பது முடியாத காரியம். நான் உட்கார்ந்திருக்கக்கூடிய நேரம் இருக்கிறது. அப்பொழுது அவர்கள் எழுந்து பேசுவதற்கு வாய்ப்பு இருக்கிறது. அந்த முறையை பின்பற்றுவதற்கு அவர்கள் பழக்கப்படுத்திக்கொள்ள வேண்டும் என்று மீண்டும் கேட்டுக்கொள்கிறேன். கேள்வி நேரம் ஒரு மணி நேரம் ஆகிவிட்டது. இதைப்பற்றி அமைச்சர் அவர்கள் இரண்டு நாட்களுக்கு முன்பு விளக்கமாகக் கூறியிருக்கிறார்கள். மேலும் இந்தச் சபையினுடைய காலத்தை நான் வீணுக்க விரும்பவில்லை. அடுத்த கேள்விக்குப் போகிறேன்.

THIRU K. VINAYAKAM : On a point of order, Sir. With due respect to the Chair, when there is a discrepancy between the answer given by the Hon. Minister to-day and the answer given three days back, is it not the duty or the privilege of a Member to contradict it and elicit further information on this issue ? Please let me have your ruling.

மாண்புமிகு துணைப் பேரவைத் தலைவர் : அமைச்சர் அவர்கள் நேற்று கூறியதற்கும், இன்று கூறியதற்கும் முரண்பாடு இருக்குமானுல், அதைப் பற்றி கேட்பதற்கு அங்கத்தினர்களுக்கு உரிமை இருக்கிறது. ஆனுல், அமைச்சர் அவர்கள் இதுபற்றி தெளிவு பெறவேண்டிய அளவுக்குக் குறிப்பிட்டிருக்கிற காரணத்தினுல், மேலும் இதுபற்றி விளக்கம் கோருவதற்கு நான் இடம் அளிக்கவில்லை என்றுதான் கூறுகிறேன்.

வட்டார மருத்துவ மனை

*152 **வினு.—திரு. பெ. மலேச்சாமி :** மதிப்பிற்குரிய பொதுச் சுகாதார அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா :—

ஒவ்வொரு ஊராட்சி ஒன்றிப்பு எல்லைக்குள் வட்டார மருத்துவ மனையைப் போல (**Taluk Headquarters Hospital**) மருத்துவ மனைகள் அமைக்கும் உத்தேசம் ஏதேனும் பரிசீலனையிலுள்ளதா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தற்போது இல்லை.

திரு. பெ. மலேச்சாமி : இனிமேலாவது இந்தத் திட்டத்தை அமுல் படுத்துவதற்கு இந்த அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : நிதி நிலைமை சீர்பட்ட பிறகு இதுபற்றி பரிசீலிக்கப்படும்.

திரு. எம். சுரேந்திரன் : இம்மாதிரியான ஒரு ஆஸ்பத்திரி துவக்குவதற்காக 1961-ல் நங்கவல்லி பஞ்சாயத்து யூனியன் முயற்சி செய்தார்கள். அது எந்த நிலையில் இருக்கிறது என்று சொல்ல முடியுமா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : கனம் உறுப்பினர் அதுபற்றி தனிக் கேள்வி போடவேண்டும்.

திரு. நா. சௌந்திரபாண்டியன் : தாலுகா தலைநகர மருத்துவ மனைகளை அரசாங்கம் எடுத்துக் கொள்வதுபோல், உப தாலுகா தலைநகர் மருத்துவ மனைகளையும் அரசாங்கம் உடனடியாக எடுத்துக்கொண்டு அவைகளை அரசாங்க ஆஸ்பத்திரிகளாக ஆக்குவதற்கு அரசாங்கத்திற்கு உத்தேசம் உண்டா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : ஏற்கனவே குறிப்பிட்டதுபோல அரசாங்கத்தின் நிதி நிலைமை சீர்பட்ட பிறகு அதுபற்றி பரிசீலிக்கப்படும்.

திரு. முனு ஆதி : முந்திய சர்க்கார் சில டாலுக் ஹெட்குவார்டர்ஸ் ஆஸ்பத்திரிகளைக் கட்டவேண்டும் என்று திட்டமிட்டு, பணம் ஒதுக்கியும், கட்டாமல் காலதாமதம் ஆகிக்கொண்டிருக்கிறது. அவைகளுக்கு முதல் இடம் கொடுத்து அரசாங்கம் உடனே நடவடிக்கை எடுத்து ஆவன செய்யுமா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : கனம் உறுப்பினர் அவர்களுடைய கருத்து பரிசீலிக்கப்பட்டு, உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. எம். கண்ணப்பன் : ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியனுக்கும் ஒரு பிரைமரி ஹெல்த் சென்டர் என்று இருப்பதால், கிராமப் பகுதிகளிலுள்ள எல்லா மக்களுக்கும் மருத்துவ வசதி கிடைப்பதில்லை. ஆகையால் ரூரல் டிஸ்பென்சரிகளை அதிகப்படுத்துவதற்கான ஏற்பாடுகள் செய்வதற்கு அரசாங்கத்திற்கு உத்தேசம் உண்டா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : ஏற்கனவே குறிப்பிட்டது போல அரசாங்கத்தின் நிதி நிலைமை சீர்பட்ட பிறகு, உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

புலவர் க. முருகையன் : திருவையாறு தொகுதியின் தலைநகரம் திருவையாருக இருந்தாலும், அங்கே அரசினர் மருத்துவமனை ஒன்று இல்லை. தனிப்பட்ட வகையில்தான் நடக்கிறது. அதை சர்க்கார் ஏற்றுக் கொண்டு நடத்த முன்வருமா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : மூலக் கேள்விக்கும் இதற்கும் தொடர்பு இல்லை. எனவே, கனம் உறுப்பினர் அவர்கள் தனிக் கேள்வி போடவேண்டும்.

Thiru B. VENKATASWAMY : Hon. Deputy Speaker, Sir, may I know whether there is any proposal to employ Homoeopathy trained doctors in the maternity centres and hospitals?

The Hon. Thiru C. N. ANNADURAI : This Government is thinking of bringing forward a measure to regularise Homoeopathy system. When the measure is brought into force, the question will be considered.

நகர மன்றங்களின் வருமானம்

* 153 வின.—**திரு. எஸ். சிவசுப்பிரமணியன் :** மதிப்பிற்குரிய தல நிர்வாக அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா :

மு ப. (அ) நகர சபைகளின் வருமானத்தை அதிகரிப்பது எப்படி என்று ஆலோசனை கூற அரசாங்கம் ஏதேனும் கமிட்டி அமைத்துள்ளதா ?

(இ) ஆம், எனில் ; அதன் விபரம் என்ன ?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : (அ) இல்லை.

(இ) வின எழ இடமில்லை.

திரு. எஸ். சிவசுப்பிரமணியன் : தலைவர் அவர்களே, இனிமேலாவது அப்படிப்பட்ட கமிட்டியை அமைக்க சர்க்கார் உத்தேசிக்குமா ?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : அரசாங்கம் 6—12—1965-ல் ஒரு தனி அதிகாரியை நியமித்தார்கள். அவர் அதைப் பரிசீலித்துக் கொண்டிருக்கிறார். அவருடைய முடிவு வந்த பிறகு இது ஆலோசிக்கப் படும்.

மாண்புமிகு துணைப் பேரவைத் தலைவர் : கேள்வி நேரம் முடிந்து விட்டது. இன்னும் 15 நிமிஷங்கள் எடுத்துக் கொண்டு கேள்விகளை முடிக்க சபையின் அனுமதியைக் கோருகிறேன்.